நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள். 30.08.2022

**சாதாரணக் கூட்டம்**

**சுபகிருது வருடம் ஆவணி மாதம் 14ஆம் தேதி 2022ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 30ம் தேதி (30.08.2022) செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவிருக்கிற அம்பாசமுத்திரம் நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்,**

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 30.08. 2022 | 198 | **பொருள் எண் : 1**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவர் திரு.K.K.C.பிரபாகரபாண்டியன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலகத்தின் மேற்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள **தமிழ்வாழ்க** போர்டு ஒளிராமல் இருப்பதை பழுது நீக்கம் செய்து மீண்டும் ஒளிர செய்திட கேட்டல். | அனுமதிக்கப்படுகிறது |
| 30.08. 2022 | 199 | **பொருள் எண் : 2**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 1 வது வார்டு உறுப்பினர் திரு.K.S.R.மாரிமுத்து அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. RS காலனியில் அனைத்து வீடுகளுக்கும் சீரான குடிநீர் கிடைத்திடும் வகையில் இரண்டு மண்டலங்களாக (Zone) பிரித்து குடிநீர் வழங்கிட கேட்டல்.<br>2. RS காலனி 0.60.LL -OHTக்கு கோடாரங்குளம் நீரேற்று நிலைய 300 MM பிராதன நீரேற்று குழாயிலிருந்து நேரடியாக நீரேற்றம் செய்திட வழிவகை செய்திட கேட்டல்.<br>3. ரயில்வே ஸ்டேசன் அருகில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை பராமரிப்பு செய்து வர்ணம் அடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர கேட்டல்.<br>4. ஏ.வி.ஆர்.எம்.வி அரசு மகளிர் மேல்நிலை பள்ளி அருகிலுள்ள பழைய பயணிகள் நிழற்குடையை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய பயணிகள் நிழற்குடையை செயல்பாட்டிற்கு கொண்டு வர ஏற்கனவே தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. அப்பணியை உடனடியாக செயல்படுத்திட கேட்டல்.<br>5. திலகர்புரம் மெயின் ரோடு, அய்யனார்குளம் தெற்கு தெரு மற்றும் பண்ணை சங்கரய்யர் நகர் ஆகிய பகுதிகளில் மாடுகள் மற்றும் நாய்களால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவைகளால் அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு வருகிறது. அவற்றை கட்டுப்படுத்தும் வகையில் ஏற்கனவே நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை உடனடியாக செயல்பாட்டில் கொண்டு வர கேட்டல்.<br>6. பண்ணை சங்கரய்யர் நகர் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பூங்காவை சீரமைக்க ஏற்கனவே நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை உடனடியாக செயல்பாட்டில் கொண்டு வர கேட்டல்.<br>7. பண்ணை சங்கரய்யர் நகரில் அனைத்து பகுதிகளிலும் மழை நீர் தேங்குவதை தடுக்கும் பொருட்டு மழை காலத்திற்கு முன்பாக தெருக்கள் மற்றும் காலிமனைகளில் புதர்களை அகற்றி சுத்தம் செய்திட கேட்டல்.<br>8. பண்ணை சங்கரய்யர் நகரில் அடிக்கடி திருட்டு சம்பவம் நடைபெறுவதால் போர்க்கால அடிப்படையில் அனைத்து மின் கம்பங்களிலும் புதிதாக மின்விளக்குகள் அமைத்து தர கேட்டல். | அனுமதிக்கப்பட்டது. வரிசை எண் 2 ல் உள்ள பணிக்கு மட்டும் குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில்நுட்ப ஆலோசனை பெற்று அனுமதி வழங்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 30.08.<br>2022 | 200 | **பொருள் எண் : 3**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 4 வது வார்டு உறுப்பினர் திருமதி. P. M. அனுசுயா அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. பிள்ளையார் கோவில் தெருவில் வாறுகால் அமைத்து பேவர் பிளாக் சாலை அமைத்து தர கேட்டல்.<br>2. பிள்ளையார் கோவில் தெரு பால்காரர் வீட்டிலிருந்து வாய்க்கால் வரையில் பேவர் பிளாக் சாலை அமைத்து தர கேட்டல்.<br>3. பெருமாள் கோவில் தெரு முத்துபாண்டி வீட்டிலிருந்து திராவிட மணி வீடு வரை பேவர் பிளாக் சாலை அமைத்து தர கேட்டல்.<br>4. மேலக்காலனி மெயின் ரோட்டில் அமைந்துள்ள சமுதாய நலக் கூடத்தில் பராமரிப்பு பணிகள் செய்து, கழிப்பறை வசதி செய்து தரக் கேட்டல்.<br>5. கோவில்குளம் அரசு மாணவியர் விடுதியில் தினந்தோறும் குடிநீர் கிடைத்திட ஏற்பாடு செய்து தரக் கேட்டல்.<br>6. சாஸ்தான் கோவில் தெருவில் இரண்டு சாலைகள் அமைத்து தர கோவில் கேட்டல்.<br>7. ஆசாரிமார் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்து தர கேட்டல். | அனுமதி வழங்கப்படு கிறது |
| 30.08.<br>2022 | 201 | **பொருள் எண் : 4**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 13வது வார்டு உறுப்பினர் திருமதி. பேச்சிகனியம்மாள் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. ஏ.வி.ஆர்.எம்.வி அரசு மகளிர் மேல்நிலை பள்ளி அருகிலுள்ள தென்காசி – பாபநாசம் சந்திப்பு பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லும் பகுதியாக உள்ளது. அதன் அருகில் பொதுமக்கள் நலன் கருதி நவீன கழிப்பிடம் அமைத்து தர கேட்டல்.<br>2. சுப்பிரமணியபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஊட்டச்சத்து மையம் அருகிலுள்ள பகுதிகளை R.G.R நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்துள்ளது. ஆக்கிரமிப்பு பகுதிகளை ஆய்வு செய்து நகராட்சி கையகப்படுத்திட நடவடிக்கை எடுக்க கேட்டல்.<br>3. சுப்பிரமணியபுரம் 13வது வார்டில் உள்ள குழந்தைகள் ஊட்டச்சத்து மையத்தினை பராமரிப்பு செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர கேட்டல்.<br>4. சுப்பிரமணியபுரம் பொத்தை பகுதியிலுள்ள நகராட்சி சுகாதார பணியாளர்கள் குடியிருப்புகள் சிதிலமடைந்து குடியிருக்க தகுதியில்லாத நிலையில் இருப்பதால் அவற்றை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய குடியிருப்புகள் அமைத்திட நடவடிக்கை எடுக்க கேட்டல்.<br>5. இரயில்வே பீடர் ரோட்டில் பேவர் பிளாக் சாலை அமைத்து தர கேட்டல். | அனுமதிக்க ப்பட்டது |
| 30.08.<br>2022 | 202 | **பொருள் எண் : 5**<br>அம்பாசமுத்திரம் நகர்மன்ற 19வது வார்டு உறுப்பினர் திருமதி. S. ஜோதிகலா அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>1. ஊர்க்காடு வாணுவர் தெருவில் வாட்டர் டேங்க் எதிர்ப்புறம் உள்ள மின் கம்பம் வாணுவர் தெரு சுப்பிரமணியன் (கோர்ட்) வீட்டின் அருகிலுள்ள மின்கம்பம் மற்றும் வாணுவர் தெரு இசக்கி செட்டியார் வீட்டின் அருகிலுள்ள மின்கம்பம் ஆகிய மூன்றும் வாறுகாலில் நடுவில் அமைந்துள்ளதால், அவற்றின் அடிப்பகுதி துார்ந்து மின்கம்பம் உடைந்து விழும் அபாய நிலையில் உள்ளது. ஆகையால் பொதுமக்களின் நலன் கருதி அவற்றை வேறு இடத்தில் புதிய மின்கம்பங்கள் மூலம் அமைத்திட தமிழ்நாடு மின்வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டல். | அனுமதிக்க ப்பட்டது |
| 30.08.<br>2022 | 203 | **பொருள் எண் : 6**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர், பணிமேற்பார்வையாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்களின் அறைகளுக்கு புதிதாக 3 பீரோக்கள் வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்க ப்பட்டது |

<table>
<tr><td>30.08.<br>2022</td><td>204</td><td>பொருள் எண் : 7<br>அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொது பிரிவிற்கு Computer – 1 Nos, Printer with Scanner – 1 No, Xerox Machine – 1 No, மற்றும் வருவாய் பிரிவிற்கு Computer – 2 Nos, Printer – 1 No, ஆகியவை புதிதாக வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ 5.00 லட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>அனுமதிக்க ப்பட்டது</td></tr>
<tr><td>30.08.<br>2022</td><td>205</td><td>பொருள் எண் : 8<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் பதிவறை எழுத்தர் பணியிடத்தில் பணிபுரிந்து வரும் திருமதி. கு. பத்மாவதி என்பவர் மாவட்டட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக 07.10.2010 அன்று துப்புரவு பணியாளராக நியமனம் செய்யப்பட்டார். அதன் பின்னர் தனியர் நியமனக்குழு கூட்ட தீர்மான எண். 21, நாள் 18.08.2011 ன் படி பதவி உயர்வில் பதிவறை எழுத்தல் காலிப் பணியிடத்தில் ஏற்ற முறை ஊதியமான ரூ 4800–10000+த.ஊ 1400 என்ற நிலையில் 19.08.2011 முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தனியருடைய நியமனம் தொடர்பாக 2012 – 13 ஆம் ஆண்டு தணிக்கைத் தடை பத்தி எண். 52ல் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தனியரின் நியமன குறைபாட்டினை களைவதற்கும் ஆண்டுதோறும் தொடர்ந்து வரும் தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்திடவும், சென்னை, நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிமுறையாக அரசின் பின்னேற்பு பெற்றிட ஏதுவாக செயற்குறிப்பு சமர்ப்பித்திட மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.</td><td>அனுமதிக்க ப்பட்டது</td></tr>
<tr><td>30.08.<br>2022</td><td>206</td><td>பொருள் எண் : 9<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் பொதுநிதி 2022–23ன் கீழ், கீழ்கண்ட விபரப்படி உள்ள பணி மேற்கொள்ள 23.08.2022ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு விகித விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">அம்பாசமுத்திரம் நகராட்சியிலுள்ள நகர்மன்ற தலைவர் அறை மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கு ஆகியவற்றை பழுது நீக்கம் செய்து மேம்பாட்டு பணி<br>(மதிப்பீடு ரூ.6.30 இலட்சம் )</td><td>திரு.B.சண்முகசுந்த ரம்,<br>ஒப்பந்தகாரர்,<br>அம்பாசமுத்திரம்</td><td>0.01%<br>குறைவு</td></tr>
<tr><td>திரு.ஜெயபிரகாஷ்,<br>ஒப்பந்தகாரர்,<br>விக்கிரமசிங்கபுரம்</td><td>1.30%<br>அதிகம்</td></tr>
</table></td><td>அனுமதிக்க ப்பட்டது</td></tr>
<tr><td>30.08.<br>2022</td><td>207</td><td>பொருள் எண் : 10<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் பொதுநிதி 2022–23ன் கீழ், கீழ்கண்ட விபரப்படி உள்ள பணி மேற்கொள்ள 23.08.2022ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு விகித விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய ஊர்க்காடு ராமர் கோவில் நீரேற்றும் நிலையத்தில் உள்ள உறை கிணறு மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி</td><td>திரு.ஜெயபிரகாஷ்,<br>ஒப்பந்தகாரர்,<br>விக்கிரமசிங்கபுரம்</td><td>மதிப்பீட்டு<br>தொகை</td></tr>
<tr><td>திரு.ஜான் அலெக்ஸாண்டர்,<br>ஒப்பந்தகாரர்,</td><td>0.12%<br>அதிகம்</td></tr>
</table></td><td>அனுமதிக்க ப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><table><tr><td></td><td>ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணி<br>(மதிப்பீடு ரூ.1.15 இலட்சம்)</td><td>அம்பாசமுத்திரம்</td><td></td></tr></table></td><td></td></tr>
<tr><td>30.08.<br>2022</td><td>208</td><td>பொருள் எண் : 11<br>அம்பாசமுத்திரம் நகராட்சி நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–22ம் ஆண்டு திட்டத்தின் கீழ், கீழ்கண்ட விபரப்படி உள்ள பணி மேற்கொள்ள 12.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலை விபரம்</th><th>கலந்து கொண்ட ஒப்பந்தகாரர்களின் பெயர்</th><th>மதிப்பீட்டிலிருந்து அதிகம் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">அம்பாசமுத்திரம் பாபநாசம் மெயின்ரோடு பூக்கடை சந்திப்பில் Minimast Light 12 metre height with 6 Nos of 150W LED Fitting நிறுவும் பணி<br>(மதிப்பீடு ரூ. 4.00 இலட்சம்)</td><td>குமார் ஏஜென்ஸி திருநெல்வேலி</td><td>0.03% குறைவு</td></tr>
<tr><td>ஸ்ரீ கங்கா எலக்ரிகல்ஸ், திருநெல்வேலி</td><td>0.06% அதிகம்</td></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.08.<br>2022</td><td>209</td><td>பொருள் எண் : 12<br>அம்பாசமுத்திரம் நகராட்சி நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–22ம் ஆண்டு திட்டத்தின் கீழ், கீழ்கண்ட விபரப்படி உள்ள பணி மேற்கொள்ள 12.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலை விபரம்</th><th>கலந்து கொண்ட ஒப்பந்தகாரர்களின் பெயர்</th><th>மதிப்பீட்டிலிருந்து அதிகம் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">அம்பாசமுத்திரம் பாபநாசம் மெயின்ரோடு வண்டிமறிச்சியம்மன் கோவில் அருகே Minimast Light 12 metre height with 6 Nos of 150W LED Fitting நிறுவும் பணி<br>(மதிப்பீடு ரூ. 4.00 இலட்சம்)</td><td>குமார் ஏஜென்ஸி திருநெல்வேலி</td><td>0.03% குறைவு</td></tr>
<tr><td>ஸ்ரீ கங்கா எலக்ரிகல்ஸ், திருநெல்வேலி</td><td>0.06% அதிகம்</td></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.08.<br>2022</td><td>210</td><td>பொருள் எண் : 13<br>அம்பாசமுத்திரம் நகராட்சி நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–22ம் ஆண்டு திட்டத்தின் கீழ், கீழ்கண்ட விபரப்படி உள்ள பணி மேற்கொள்ள 12.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலை விபரம்</th><th>கலந்து கொண்ட ஒப்பந்தகாரர்களின் பெயர்</th><th>மதிப்பீட்டிலிருந்து அதிகம் / குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>அம்பாசமுத்திரம் பாபநாசம் மெயின்ரோடு அகஸ்தியர்</td><td>குமார் ஏஜென்ஸி திருநெல்வேலி</td><td>0.03% குறைவு</td></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><table><tr><td></td><td>கோவில் அருகே Minimast Light 12 metre height with 6 Nos of 150W LED Fitting நிறுவும் பணி<br>( மதிப்பீடு ரூ. 4.00 இலட்சம் )</td><td>ஸ்ரீ கங்கா எலக்ரிகல்ஸ், திருநெல்வேலி</td><td>0.06% அதிகம்</td></tr></table></td><td></td></tr>
<tr><td>30.08. 2022</td><td>211</td><td>பொருள் எண் : 14<br>அம்பாசமுத்திரம் நகராட்சி ஊர்க்காடு ராமர் கோவில் நீரேற்றும் நிலையத்தில் குடிநீரில் கிருமி நாசினி கலக்கும் Liquid Chlorine plant புதிதாக நிறுவும் பணி மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5,40,000– மன்றத்தின் பார்வைக்கும் இப்பணியினை நகராட்சி குடிநீர்திட்ட நிதியில் இருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>அனுமதிக்க ப்பட்டது</td></tr>
<tr><td>30.08. 2022</td><td>212</td><td>பொருள் எண் : 15<br>அம்பாசமுத்திரம் நகராட்சி ஊர்க்காடு சுடலை கோவிலுள்ள மூன்று நீரேற்றும் நிலையத்தில் குடிநீரில் கிருமி நாசினி கலக்கும் Liquid Chlorine plant மூன்றையும் பழுது நீக்கம் செய்து பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,20,000– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். இப்பணியினை நகராட்சி குடிநீர்திட்டநிதியில் இருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>அனுமதிக்க ப்பட்டது</td></tr>
<tr><td>30.08. 2022</td><td>213</td><td>பொருள் எண் : 16<br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் பணியாற்றிய ஆணையாளர்களின் பணிக்காலம் பற்றிய விபரம் மரப்பலகையில் பெயின்ட் மூலம் தயார் செய்த வகைக்கும், ஊர்க்காடு நீரேற்று நிலைய உறை கிணறுகளில் உறை கிணறு பற்றிய விபரம் பெயின்ட் மூலம் எழுதிய வகைக்கும், 10.08.2022 அன்று வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.<table><tr><th>வ. எ ண்</th><th>வேலை விபரம்</th><th>விஜய் ஆர்ட்ஸ், அம்பாசமுத் திரம் ரூபாய்</th><th>ஸ்ரீ கிருஷ்ணா ஆர்ட்ஸ் அம்பாசமுத் திரம் ரூபாய்</th><th>ஸ்ரீ ராம் ஆர்ட்ஸ் அம்பாசமு த்திரம் ரூபாய்</th></tr><tr><td>1</td><td>அம்பாசமுத்திரம் நகராட்சியில் பணியாற்றிய ஆணையாளர்களின் பணிக்காலம் பற்றிய விபரம் மரப்பலகையில் பெயின்ட் மூலம் தயார் செய்தல்</td><td>12750/-</td><td>13500/-</td><td>14000/-</td></tr><tr><td>2</td><td>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய ஊர்க்காடு நீரேற்று நிலைய உறை கிணறுகளில் உறை கிணறு பற்றிய விபரம் பெயின்ட் மூலம் எழுதுதல் – கிணறு 1க்கு</td><td>1700/-</td><td>1800/-</td><td>2000/-</td></tr></table></td><td>அனுமதிக்க ப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 30.08.<br>2022 | 214 | **பொருள் எண் : 17**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி பொறியியல் பிரிவிற்கு கணினி ஆப்ரேட்டர், தெருவிளக்கு பராமரிப்பாளர்கள் மற்றும் குடிநீர் வழங்கல் வால்வு திறப்பாளர்கள் என மொத்தம் 16 பணியாளர்கள் தேவைப்படுவதால் அவர்களை அம்பாசமுத்திரம் MKS சுயஉதவிக்குழு மூலம் 01.08.2022 முதல் நியமித்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்க ப்பட்டது |
| 30.08.<br>2022 | 215 | **பொருள் எண் : 18**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியின் ஒப்பந்தகாரரான சங்கரன்கோவில் திரு. K. ராஜா முகமது என்பவரிடமிருந்து திட்ட பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகைகள் அன்னாருக்கு திரும்ப வழங்கப்படாமல் காலங்கடந்த வைப்பு தொகைகளாக ஆகி விட்டன. அன்னாருக்கு 2018–19 ஆண்டுக்கான காலங்கடந்த வைப்பு தொகை ரூ. 16,12,100/– மட்டும் திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்க ப்பட்டது |
| 30.08.<br>2022 | 216 | **பொருள் எண் : 19**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியின் ஒப்பந்தகாரரான பொட்டல் திரு. N. முத்துகுட்டி என்பவரிடமிருந்து பல்வேறு திட்ட பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகைகள் அன்னாருக்கு திரும்ப வழங்கப்படாமல் காலங்கடந்த வைப்பு தொகைகளாக ஆகி விட்டன. அன்னாருக்கு 2015–16 முதல் 2018–19 வரை உள்ள காலங்கடந்த வைப்பு தொகை ரூ. 4,11,188/– மட்டும் திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்க ப்பட்டது |
| 30.08.<br>2022 | 217 | **பொருள் எண் : 20**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியின் ஒப்பந்தகாரரான ஆலங்குளம் திரு. M. மாரிதுரை என்பவரிடமிருந்து திட்ட பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகைகள் அன்னாருக்கு திரும்ப வழங்கப்படாமல் காலங்கடந்த வைப்பு தொகைகளாக ஆகி விட்டன. அன்னாருக்கு 2018–19 ஆண்டுக்கான காலங்கடந்த வைப்பு தொகை ரூ. 5,00,000/– மட்டும் திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்க ப்பட்டது |
| 30.08.<br>2022 | 218 | **பொருள் எண் : 21**<br>அம்பாசமுத்திரம் நகராட்சியின் ஒப்பந்தகாரரான சங்கரன்கோவில் திரு. K. நிசார் என்பவரிடமிருந்து திட்ட பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகைகள் அன்னாருக்கு திரும்ப வழங்கப்படாமல் காலங்கடந்த வைப்பு தொகைகளாக ஆகி விட்டன. அன்னாருக்கு 2018–19 ஆண்டுக்கான காலங்கடந்த வைப்பு தொகை ரூ. 3,15,000/– மட்டும் திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்க ப்பட்டது |

**(ஒ–ம்) கே.கே.சி. பிரபாகர பாண்டியன்**
நகர்மன்ற தலைவர்
அம்பாசமுத்திரம் நகராட்சி